திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி மாநகரம் தெற்கு பகுதி திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மேயர் ஆவடி ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மாவட்ட நிர்வாகிகள் காயத்திரி ஸ்ரீதர், ஜி.விமல்வர்ஷன், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், டி.தேசிங்கு, மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபிசேகர், ஜோதிலட்சுமி, இரா.ருக்கு, கார்த்திகேயன், தா.வின்செண்ட், கீதா யுவராஜ், இரா. செல்வராஜ், எம்.பாலா, ஹரி, எம்.குமார், எம்.ராஜேந்திரன், சகாபுதின், ராஜசுந்தரம், கே.சுரேஷ்குமார், வழக்கறிஞர் பெ.வினோத், ஜி.துர்கா பிரசாத், ஒ.ஆர்.நாகூர் கனி, உள்பட மாநகர பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வார்டு செயலாளர்கள் கவுன்சிலர்கள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்

சேலம் மாவட்டம் - வெள்ளையம்பட்டி பட்டாசு ஆலை வெடிவிபத்தில்

உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப்.5-

சேலம் மாவட்டம், குப்பனூர் கிராமம், வெள்ளையம்பட்டியில் தனியார் பட்டாசு ஆலையில் நிகழ்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :

சேலம் மாவட்டம், சேலம் வட்டம், குப்பனூர் கிராமம், வெள்ளையம்பட்டியில் உள்ள தனியார் பட்டாசு ஆலையில் நேற்று (4-9-2024) காலை 10.00 மணியளவில் நிகழ்ந்த வெடிவிபத்தில் சிவகாசியை சேர்ந்த ஜெயராமன் (வயது 55) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் சேலம் வட்டம், சின்னனூரைச் சேர்ந்த சுரேஷ் குமார் (வயது 34) மற்றும் சிவகாசியை சேர்ந்த முத்துராஜா (வயது 47) ஆகிய இருவர் பலத்த காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த வெடிவிபத்தில் உயிரிழந்த ஜெயராமன் என்பவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் வழங்கிடவும், காயமடைந்த இருநபர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

திருமண விழா - ஆசிரியர் தின விழாவில் பங்கேற்க வரும்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மறைமலைநகர் - வண்டலூரில் உற்சாக வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, செப்.5-

மறைமலைநகரில் இன்று காலை நடைபெறும் ஜெ.சண்முகம் மகன் திருமண விழா மற்றும் வண்டலூரில் நடைபெறும் ஆசிரியர் தின விழாவில் பங்கேற்று நல்லாசிரியர் விருதுகள் வழங்கும் விழாவிலும் பங்கேற்க வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மறைமலைநகர் மற்றும் வண்டலூர் ஆகிய 2 இடங்களிலும் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

மறைமலைநகர் நகர கழகச் செயலாளர் - நகர மன்றத் தலைவர் ஜெ.சண்முகம் மகன் திருமண விழா இன்று (5.9.2024) காலை 9.00 மணியளவில் மறைமலைநகரில் ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கலைஞர் விளையாட்டு மைதானத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று இத்திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

அதையொட்டி மறைமலைநகரில் திருமணம் நடைபெறும் கலைஞர் விளையாட்டு மைதான முகப்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இத்திருமணத்தை நடத்தி வைத்து சிறப்புரையாற்றிய பின்னர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வண்டலூர் செல்கிறார்.

வண்டலூரில் உள்ள கிரசென்ட் பல்கலைக்கழக கூட்ட அரங்கில் தமிழ்நாடு அரசு, பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெறும் ஆசிரியர் தின விழாவில் பங்கேற்று சிறப்பாக கல்விப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளை வழங்கி கவுரவிக்கிறார்.

இதையொட்டி காட்டாங்குளத்தூர் வடக்கு - தெற்கு ஒன்றியம் மற்றும் நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகர தி.மு.க. சார்பில் மிகவும் எழுச்சியான முறையில் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் காட்டாங்குளத்தூர் வடக்கு - தெற்கு ஒன்றிய கழகத்தினரும், நந்திவரம்-கூடுவாஞ்சேரி நகர கழகத்தினரும் பெருந்திரளாக திரண்டு நின்று உற்சாகமான வரவேற்பு அளிக்க உள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.

சென்னை பெரம்பூரைச் சேர்ந்த

புற்றுநோயாளியின் சிகிச்சைக்கு ரூ.3 லட்சம் பிரதமர் நிவாரண நிதி!

வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. கோரிக்கை ஏற்பு!

புதுடெல்லி, செப். 5 -

சென்னை பெரம்பூரை சேர்ந்த முத்து. புற்றுநோய் சிகிச்சைக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்கப் பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், தி.மு.க சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளரு மான இரா.கிரிராஜன் விடுத்த கோரிக்கையை ஏற்று பிரதமர் அலுவலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சென்னை பெரம்பூரை சேர்ந்தவர் முத்து இவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் சென்னை அடையாறு புற்றுநோய் மையத்தில் சிகிச்சை பெற நிதி உதவி இல்லாமல் இருந்தார். இது தொடர்பாக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து, அவருக்கு உதவிடுமாறு பிரதமர் மோடிக்கு இரா. கிரிராஜன் எம்.பி கடிதம் எழுதியிருந்தார்.

இந்த பரிந்துரையை ஏற்று பிரதமர் மோடி,

முத்துவின் புற்றுநோய் சிகிச்சைக்கு பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான கடிதங்களை மருத்துவமனைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. கிரிராஜனுக்கு பிரதமர் அலுவலகம் அனுப்பியுள்ளது.

சிகிச்சைக்கான தொகை ரூ. 3 லட்சத்தை நோயாளி சிகிச்சை பெறும் சென்னை, அடையாறு புற்றுநோய் மையத்திற்க்கு நேரடியாக வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை, பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் காஜாமுகைதீன், சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், நாகை மாலி எம்.எல்.ஏ., மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் உள்பட பலர் உள்ளனர்.

சென்னையில் ரோந்துப் பணியின்போது

உடல்நலக் குறைவால் உயிரிழந்த காவலர் குடும்பத்துக்கு ஆறுதல் - ரூ.25 இலட்சம் நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 5-

சென்னையில் ரோந்துப் பணியின்போது உடல்நலக் குறைவு ஏற்பட்டு உயிரிழந்த காவலர் குடும்பத்திற்கு ஆறுதல் கூறியதுடன் நிதியுதவி வழங்கிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் உத்தரவு வருமாறு:-

சென்னை, மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த ரவிக்குமார் (வயது 59) என்பவர் நேற்று (3.9.2024) காலை மீனம்பாக்கம் அருகில் தேசிய நெடுஞ்சாலையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் காலை 11.15 மணியளவில் நெஞ்சுவலி ஏற்பட்டு சாலையோரத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

முதல்நிலைக் காவலர் ரவிக்குமார் அவர்களின் மறைவு தமிழ்நாடு காவல் துறைக்கும் அவரது குடும்பத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

ரவிக்குமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணியாற்றும் காவல் துறையினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்திற்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும்

கடனுதவித் திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம்!

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா தலைமையில் நடைபெற்றது!

தஞ்சாவூர், செப். 5 -

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (6T) கா.காஜா முகைதீன் தலைமையில் மேலாண்மை இயக்குநர் திரு.தி.என்.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் ஆகியோர் முன்னிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் 29.08.2024 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (எ) கா.காஜா முகைதீன் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கடனுதவி திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டுள்ள தனிநபர் கடன், கறவை மாட்டுக் கடன், சுய உதவிக் குழு கடன், நீர்ப்பாசனக் கடன் மற்றும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடனுதவித் தொகை விவரங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் குறித்தும் அதிகாரிகள் விளக்கினார்.

இந்த ஆய்வில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் விரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவர் துறைமுகம் காஜா (எ) கா.காஜா முகைதீன் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் தி.என்.வெங்கடேஷ், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சரபோஜி அரசு கல்லூரி மாணவர் விடுதி (பி.ந) க்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக தள ஆய்வு மேற்கொண்டு கட்டுமானத்திற்கான திட்ட மதிப்பீட்டினை ஆய்வு செய்தார்.

மேலும், அம்மாபேட்டையில் ரெஜினாஸ்லி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி மற்றும் உக்கடை அப்பாவிதேவர் உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நேரில் சென்று மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லாமிதிவண்டிகள் பொருத்தும் பணிகளை ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அறிவுரைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர். சுதா, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), க. அன்பழகன் (கும்பகோணம்), என்.அசோக் குமார் (பேராவூரணி), முனைவர். எம்.எச்.ஜவாஹிருல்லா (பாபநாசம்), மாநகராட்சி மேயர்கள் சண்.ராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர்.உஷா புண்ணிய மூர்த்தி, மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.சுதா ராணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நா.மோ.முரளி தலைமை! கே.ஏழுமலை- கழகத்தினர் பங்கேற்பு!

தியாகராயர் நகர் 132 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - ஈரோடு இறைவன் - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, செப். 4 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132 வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டக் கழக செயலாளர் ந.மோ.முரளி தலைமையில் நடைபெற்றது.

கோடம்பாக்கம் சத்யா, கே.எஸ்.வெல்டிங் ராஜா, கார்த்திகா பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, ஈரோடு இறைவன், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணா நிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை, எஸ்.மோகன், கோ.சு.மணி, சா.தேவராசு, எஸ்.உமாசங்கர், க.சந்துரு, எம்.ராமச்சந்திரன், என்.டி.ஆர். டி.வேலு, த.ராஜசேகரன், பிரஸ் கோவிந்தன், குப்பம்மாள், பி.வேலு, எஸ்.விஜயன். பி.சுந்தர், எஸ்.ரஜினி, கே.தேவராஜ், ஒய்.எட்வின், ராமநாதன், ஆர். வசந்த், எஸ்.பி.சசி, நோபல், வேலாயுதம், அஸ்வின்குமார், எஸ்.கே.நசீர், ச.மணிகண்டன், மு.சரவணன், நா.மு.தமிழ், க.பிரசாந்த், பா.புகழ், மணிரத்தினம், அ.தங்கராஜ் மற்றும் கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நங்கநல்லூர் பிரதான சாலையில் அமைந்துள்ள சங்கரா கண் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற 39ஆவது தேசிய கண் தானம் விழிப்புணர்வு பேரணியை நேற்று (04-09-2024) கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு துவக்கி வைத்தார். இதில் 167வது வட்டக் கழக செயலாளர் ஜெ. நடராஜன், எஸ். மகாவீர் போத்ரா, ஏ.டி. ரவிச்சந்திரன், எஸ். சிவகுமார், எஸ். ஏ.மகேஸ்வர், பாலசுப்ரமணியம், ரஜினிகாந்த், சந்திரசேகர், தீபன், ரவிச்சந்திரன், கோபாலகிருஷ்ணன், மெர்சி பிரின்ஸ், முத்துக்குமார் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள், பள்ளி, கல்லூரி, மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி

வி.எஸ்.பெரியசாமி மறைவு!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் - வீ.ஜெகதீசன் அஞ்சலி!

பெரம்பலூர், செப். 5-

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிராமத்தைச் சேர்ந்த மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர், வி.எஸ்.பெரியசாமி வயது 50. 03.09.24 அன்று காலை மாரடைப்பால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த வி.எஸ். பெரியசாமிக்கு தனலெட்சுமி என்கிற மனைவியும், சக்திராஜ், வடிவழகன் எனும் இரண்டு மகன்களும், கௌரி என்கிற மகளும் உள்ளனர். அவரது உடல் வேப்பூர் கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவரது உடலுக்கு போக்குவரத்துத்

துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பிரபாகரன்,கு. சின்னப்பா, கா.சொ.க. கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் நேற்று (04.09.24 - புதன்கிழமை) 11 மணியளவில் வேப்பூர் கிராமத்தில் தகனம் செய்யப்பட்டது.

சென்னை மேற்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு சிறப்புரையாற்றினார். இதில் மாநில இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், மாநில மகளிர் அணி சமூக வலைதள செயலாளர் டாக்டர் யாழினி, மாவட்ட அமைப்பாளர்கள் யோகேஸ்வரி சுந்தரேசன், டி.கே. லதா பிளாரன்ஸ்,மற்றும் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.